பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**31 03 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** குழாய்வழி சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் இரண்டாம் கட்ட இயக்கம் வரும் ஜூன் மாதம் **30-**ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**2.** தமிழகத்தில் திமுக ஆட்சியில் சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

**3.** திமுக அரசு கடந்த ஐந்தாண்டுகளில் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தியதாக அக்கட்சியின் இளைஞரணித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

**4.** தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Priya Ghanghas** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

நாடு முழுவதும் குழாய்வழி சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் இரண்டாம்கட்ட இயக்கப்பணிகளை வரும் ஜூன் மாதம் 30-ஆம் தேதிவரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

வீட்டு உபயோக சமையல் எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு குழாய்வழி இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

பெட்ரோலிய அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மார்ச் மாதத்தில் மூன்று லட்சத்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக பயனாளிகள், மாணவர் விடுதிகள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு லட்சத்து 70 ஆயிரம் இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அதன் வழியாக எரிவாயு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மார்ச் மாதத்தில் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் மூன்று லட்சத்து 20 ஆயிரம் பேர் ஐந்து கிலோ சமையல் எரிவாயுவை மார்ச் 23-ஆம் தேதிவரை வாங்கி பயன்படுத்தியுள்ளதாகவும் பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் போதிய அளவு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் குழாய்வழி விநியோகத்திற்கான சமையல் எரிவாயு போதிய அளவில் இருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பெட்ரோலியப் பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக எழுப்பப்படும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மாநில அரசுகளும், யூனியன் பிரதேச அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, ஊடகங்களுக்கு சரியான தகவலை அவ்வப்போது அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு கோரியுள்ளது.

<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியில் சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புவதாக கூறினார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுவாக உள்ளது என்று கூறிய அவர், பெண்கள், விவசாயிகள் மற்றும் அனைவருக்குமான நல்லாட்சியை தங்களது கூட்டணி வழங்கும் என்று தெரிவித்தார்.

திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஊழலில் ஈடுபடுவதாகவும் திரு பியூஷ் கோயல் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக-விற்கு வாக்களித்தால் மூன்று மாதங்களில் போதைப்பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த திமுக அரசு தவறிவிட்டதாக கூறினார்.

வீட்டுவரி, சொத்துவரி ஆகியவற்றை உயர்த்தியதுடன் மின் கட்டணமும் 67 சதவீதம் வரை உயர்த்தியுள்ளதாக கூறினார்.

கடந்த ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் திமுக நிறைவேற்றவில்லை என்றும் அவர் கூறினார்.

மருத்துவ கல்வி கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் கடந்த ஆட்சியில் 11 மருத்துவக் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதுடன், மருத்துவப்படிப்பில் கிராமப்புற மாணவர்களுக்கு ஏழு புள்ளி ஐந்து சதவீத இடஒதுக்கீடு கொண்டு வருவதற்கான சட்டமும் நிறைவேற்றப்பட்டதாக திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக அரசு கடந்த ஐந்தாண்டுகளில் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக அக்கட்சியின் இளைஞரணித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டத்தின் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட இடங்களில், தமது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு அஇஅதிமுக, பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் நீதிமன்றத்திற்கு சென்று தடை கோரியதாகவும் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களிடையே பாடல்

பாடி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — முருகேசன் - 42 Sec.)*

மேலும், இம்மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் தேர்தல் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் முறையீடுகளை தேர்தல் பார்வையாளர்களிடம் அளிக்கலாம் என்று தேர்தல் அலுவலர் திரு பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

*<<<<<<>>>>>*

காஞ்சிபுரத்தில் ஜெயின் சங்கம் சார்பில், ஸ்ரீ பகவான் மஹாவீர் ஜெயந்தி விழா இன்று விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, காஞ்சிபுரத்தில் பகவான் மஹாவீர் திருவுருவப்படத்துடன் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியில் ஸ்ரீமகாவீரின் அகிம்சை கொள்கை, சத்தியம், புலால் உண்ணாமை உள்ளிட்ட போதனைகள் எடுத்துரைக்கப்பட்டதாக விழா அமைப்பு ஏற்பாட்டாளர் திரு கிஷோர் குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte — கிஷோர் குமார் - 48 Sec. )*

<<<<<>>>>>

கோடை கால பயணியர் நெரிசலை கருத்தில்கொண்டு, பெங்களூரு — மால்டா இடையே தற்போது இயக்கப்பட்டுவரும் சிறப்பு ரயில், ஜூலை மாதம் **15-**ஆம் தேதிவரை நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

பெங்களூருவிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், மால்டாவிலிருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் இந்த வாராந்திர சிறப்பு ரயில் புறப்படும்.

<<<<<>>>>>

தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 18 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சேலம் சூரமங்கலம் உழவர் சந்தையில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, காய்கறிகள் மற்றும் மலர்களை கொண்டு

''என் வாக்கு — என் உரிமை'' என்று வடிவமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி பிருந்தா தேவி பொதுமக்களிடையே துண்டு பிரசுரம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

----------------

திருவண்ணாமலை மாவட்டம் இறையூர் பகுதியில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க இந்தோ — திபெத் எல்லை பாதுகாப்புப்படை வீரர்களின் கொடி அணிவகுப்பு பேரணி இன்று நடைபெற்றது.

-------------

தருமபுரி மாவட்டத்தில் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி, சமையல் சிலிண்டர்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் பணியை தேர்தல் அலுவலர் திரு சதீஷ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நாகேஸ்வர சுவாமி திருக்கோயிலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் இன்று நடைபெற்றது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Priya Ghanghas** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மங்கோலியாவின் **Ulaanbaatar-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில், கஜகஸ்தானின் **Rimma Volossenko-**வை வென்றார்.

------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், பஞ்சாப் இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது

நியூசண்டிகரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி **7.30-**க்கு தொடங்குகிறது.

------------

ஆசிய கோப்பை கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில், இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி, **7** மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**